செய்தி வெளியீடு எண்: 05-2018 நாள்: 02.02.2018

**விழுப்புரம் மாவட்டத்தில் மீன்வளத்துறையின் கீழ் இயங்கும் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ளவர்கள் தங்களது உறுப்பினர் பதிவினை 13.02.2018க்குள் புதுபித்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

*****

விழுப்புரம் மாவட்டத்தில் மீன்வளத்துறையின்கீழ் இயங்கும் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக உள்ளவர்கள் தங்களது உறுப்பினர் பதிவினை புதுப்பித்துக் கொள்ளவும், நிலுவை சந்தாத் தொகையினை மீன்வள உதவி இயக்குநர் அலுவலகம், நெ.10, (முதல் தளம்) நித்தியானந்தம் நகர், வழுதரெட்டி, விழுப்புரம் 605 401 தொலைபேசி எண்.04146-259329 என்ற விலாசத்தில் அலுவலக வேலை நாட்களில் 13.02.2018க்குள் செலுத்தி உறுப்பினர்கள் தங்களது பதிவினை புதுப்பித்துக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறும்பட்சத்தில் தங்களது உறுப்பினர் பதிவினை மீனவர் நலவாரியத்திலிருந்து நீக்கம் செய்யப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.